11. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம்—விவாதத்திற்கான பதிலுரை—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது ஒரு கருத்தைச் சொன்னார். தேர்தல் முடிந்து* result *என்னவாகும் என்று தெரிந்து, தைரியமாக முதலமைச்சர் அவர்கள் இவ்வாறு பேசியதை வரவேற்கிறேன் என்று சொன்னார். தேர்தலிலே நிச்சயமாக நாங்கள்தான் வெற்றிபெறுவோம் என்று நன்றாகவே எங்களுக்குத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்தமுறைகூட நீங்கள் அவ்வாறுதான் 'நாங்கள் இங்கே இருக்கின்றோம்; 2016–க்குப் பிறகு அங்கே வருவோம்; ஆளுங்கட்சி தரப்பிலே வருவோம்' என்று சொன்னீர்கள். ஆனால், மக்கள் நிலையாக உங்களுக்கு அந்த இடத்தையே தந்துவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் சொன்னதிலும் தவறொன்றுமில்லை. ஏனென்றால், உங்கள் தொண்டர்களெல்லாம் சோர்வாக இருக்கின்றார்கள்; அவர்கள் மனநிறைவைப் பெற வேண்டுமென்பதற்காக இந்தச் செய்தியைச் சொல்லியிருப்பீர்கள் என்று கருதுகின்றேன். ஆகவே, வருகின்ற சட்டமன்றப் பொதுத் தேர்தலாக இருந்தாலும் சரி, எந்தத் தேர்தல் வந்தாலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (மேசையைத் தட்டும் ஒலி) திடமாக, உறுதியாக, நிச்சயமாக வெற்றி பெற்று தொடர்ந்து 3–வது முறையாக நிலையான ஆட்சி தொடரும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 1–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வதில் ஒன்றும் தவறில்லை. தேர்தலுக்குப் போன எல்லோரும் இப்படித்தான் சொல்கிறார்கள். ஆனால், ஒருவர்தான் ஜெயிக்கிறார், மற்றொருவர் திரும்பி வருகிறார். அந்த* list*–ல் நீங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் எவ்வளவோ கனவு காண்கிறீர்கள். எந்தக் கனவும் பலிக்கவில்லை. அதுதான் இப்போது நடக்கிறது.*

12. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2020), மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2020)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

---

*@ **9—1—2020** ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.*